திருவிழா, ஜோதிடர் வீடு! — மாநாடு, மருத்துவமனை!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆவணி 9உ புதன் (25—8—54)
வெளியூர்: ஆவணி 10உ வியாழன் (26—8—54)

மலர்: 2 இதழ்: 62

பெயர் மாற்றம் சீர்திருத்தமாகாது!

தவழும் குழந்தை எழுந்து நடப்பதெப்படி?

சிந்தித்துச் செயல்படுவதே சீர்திருத்தம்

காஞ்சி மாநாட்டில் கலைவாணர் பணி

"சிலர் என்னைக் கேட்டனர்—'சீர்திருத்தம், காலப்போக்கில் தானாகவே மக்களிடம் இடம் பெற்றுவிடாதா? அதற்காக எதற்கு மாநாடுகள், கூட்டங்கள் எல்லாம்,'—என்று! நான் கூறினேன்—'சீர்திருத்தம் தானாகவே காலப்போக்கில் மக்களை வந்தடையக்கூடும். குழந்தை பிறக்கிறது; தானாகவே புரண்டு படுக்கிறது; தானாகவேதான் தவழ்கிறது; பின்னர் நடக்க ஆரம்பிக்கிறது. தவழ்கிற குழந்தையைப் பெற்றோர்கள் தூக்கி நிறுத்தி, நடைவண்டியைப் பிடித்து இங்கும் அங்குமாக நடத்திக் காட்டி, சுவற்றைப் பிடித்து நடக்கவும் பழக்கி, குழந்தை நன்றாக நடக்குமாறு செய்கிறார்கள்; பெற்றோர்கள், குழந்தை நடக்கும் பழக்கத்திற்கு உடனிருந்து உதவி செய்யாவிட்டாலும்கூட, குழந்தை நடக்காமலேயே இருந்துவிடாது; என்றாவது ஒருநாள் நடக்கத்தான் செய்யும்; ஆனால், ஒரே ஒரு வித்தியாசம்; பெற்றோர்கள், குழந்தைக்கு உதவி செய்தால் குழந்தை தனது ஒரு வயதிலேயே நன்றாக நடக்கப் பழகிவிடும்; பெற்றோர் உதவி செய்யாவிட்டால், குழந்தை நடப்பதற்கே, மூன்று நான்கு வயதாகலாம். அதைப் போலத்தான், சீர்திருத்தம், நாட்டில், நடைமுறைக்குக் காலப்போக்கில் வருவதென்றால் சில நூற்றாண்டுகள் ஆகலாம்; அந்தக் காலத்தைக் குறைத்து, விரைவிலேயே சீர்திருத்தத்தை மக்களிடம் இடம் பெறச் செய்வதற்கு இந்த மாதிரியான மாநாடுகள், சீர்திருத்தவாதிகள் தேவைப்படுகின்றனர்,'—என்று குறிப்பிட்டேன்."

"இந்தப் பணியை நாம் மேற்கொண்டிருப்பது, எந்தத் தனிப்பட்டவரையும் வாழ வைக்க வேண்டும், அல்லது, கெட்டொழியச் செய்ய வேண்டும் என்பதால் அல்ல; எல்லா மக்களும் பகுத்தறிவு பெற்றவர்களாய், நல்வாழ்வு பெற்றவர்களாய் ஆக்கப்பட வேண்டுமென்பதினால்தான்!"

"சீர்திருத்தக் கருத்துக்களை மக்கள் புரிந்துகொள்ளவும், அதன் தேவையை உணரவும், நன்கு சிந்திக்க வேண்டும்' சிந்தித்து, அவர்களாகவே இந்தப் புதுமைக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டால்தான் சமூக சீர்திருத்தம் நிலைக்கும்."

இவ்வாறு 21—8—54-ல், காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட 2-வது சமூக சீர்திருத்த மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குறிப்பிட்டார்.

"காஞ்சிபுரத்தில் நடைபெறுகிற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை தாங்குகிற பொறுப்பை என்னிடம் தந்துள்ள நண்பர்களுக்கு என் வணக்கமும் நன்றியும் சொல்லிக் கொள்கிறேன்.

நான் இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்க ஒப்புக்கொண்டதற்குக் காரணம், இந்த நாட்டில் சிலர், 'நடிகர்களுக்கு மக்களிடத்தில் என்ன வேலை? அவர்கள் பொதுவாழ்வில், சமூகப் பணியில் ஈடுபடுகிறார்கள்?' என்று கேட்பதின் மூலம் காட்டுகிற எதிர்ப்பு உணர்வினால் ஏற்பட்டதுதான்!

மக்களுக்கு நகைச்சுவை மூலம், தேவைப்படும் கருத்துக்களைச் சொல்ல முடியும் என்பது என் கருத்து.

நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளினுக்கு, இன்று, உலக சமாதானப் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு இந்தப் பரிசு தரப்பட்டதின் மூலம் நகைச்சுவைக் கலைக்கு கிரீடம் தரித்திருக்கிறார்கள்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், உலக சமாதானத்தை இந்த நாட்டிலும் நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளினும் பங்கு பெறுகிறார்

(4-ம் பக்கம் பார்க்க)

நாட்டின் நலிவு போக்க நாம் உறுதிகொள்கிறோம்

பிறர் சுமத்தும் பழிக்கு அஞ்சோம்

காஞ்சி மாநாட்டில் அண்ணாதுரை

"காமராசர் இப்போது ஒரு எழுதப்படாத காகிதம்; காலக் காம், அந்தக் காகிதத்தில் எழுதுவதைப் பொறுத்திருக்கிறது, நாம் அவரை ஆதரிப்பதும்—நிராகரிப்பதும்! திராவிட நாடு பிரச்சினையை அவர் ஆதரிப்பாரானால் அவர் நமக்கு நல்ல நண்பராகக்கூடும்."

"கம்யூனிஸ்டுகள், பொறுத்தமற்ற கதை பேசிப் பொழுது ஓட்டுகிறார்கள்; தி. மு. கழகம் எப்படிப்பட்ட ஜனநாயக அமைப்பாக இருக்கிறது என்பதை உணர மறுக்கிறார்கள்; முற்போக்குக் கட்சிகளுக்குள் இருக்க வேண்டிய உறவை முறித்துக் கொள்கிறார்கள்—வீண் பழி சுமத்தியும், இழித்துப் பேசியும்!"

என்று, 22—8—54-ல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 2-வது அரசியல் மாநாட்டில் சிறப்புரை ஆற்றுகையில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

பொதுச் செயலாளர் அவர்கள், தொடர்ந்து பேசியதாவது:—

"செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடுகள் நேற்றும் இன்றும் நடைபெறுகின்றன. இந்த இரண்டு நாட்களிலும் நமது தோழர்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் விரிவாகவும், விளக்கமாகவும் பேசி இருக்கிறார்கள். நேற்றைய தினம் நீங்கள் கேட்ட சொற்பொழிவுகள் எல்லாம் சாதாரண மக்களின் பொது அறிவு வளர்ச்சிக்கு பெருவாரியாகப் பயன்படும் என்பது என் துணிவு. அரிய பெரும் விஷயங்களை எல்லாம் இந்த மாநாட்டில் நீங்கள் கேட்டீர்கள்.

சீரும் சிறப்புமாக நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட்ட எல்லாத் தோழர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்ட மாநாடும் இதுபோன்றே விமரிசையாக நடைபெறுகிறது; ஏராளமாக மக்கள் கூடுகிறார்கள்; தாய்மார்கள் கூட்டமும் வளருகிறது; மகிழ்ச்சி; ஆனால், திருவிழாக்களில் கூடும் கூட்டம் இதைவிட அதிகம்; தாய்மார்கள் கூட்டம் மிக அதிகம்.

திருவிழாக்களிலே அலங்காரமும் அதிகம்; ஆனால், திருவிழா செல்லும் கூட்டம், திருவிழா பார்த்து வீடு வந்து திரும்பிய

(4-ம் பக்கம் பார்க்க)

மலர்ந்துள்ள மலர்த் தோட்டம் வளர்ந்துள்ள தி. மு. கழகம்!

பிரான்ஸ் மாநாடு முறிந்து போனது குறித்து, அமெரிக்காவில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. "மிகவும் மோசமான நிலைமை" என வாஷிங்டன் வட்டாரம், வர்ணிக்கிறது.

வெற்றிகள் வீண் பெருமைப்படுவதற்கல்ல! நற்றிரு நாடு காண்பதற்கே!

காஞ்சிபுரம் அரசியல் மாநாட்டில் தோழர் தங்கப்பழம் தலைமை உரை

★

"கடந்த போராட்டங்களின்போது, மற்ற எல்லா ஊர்களைப் போலவும்தான் தூத்துக்குடியிலும் ரயில் நிறுத்தப் போராட்டம் கண்ணியமாகவும், கட்டுப்பாடு குலையாமலும், அமைதியாகவும் நடைபெற்றது. ஆனால், போராட்ட வீரர்களுக்குச் சம்பந்தம் ஏதுமில்லாத சிறுசிறு சம்பவங்களைப் பெரிதாக்கி, தோழர்களுடன் அந்தச் சம்பவங்களை இணைத்து சதி வழக்கு ஒன்றை ஜோடித்து எங்களை எல்லாம் விசாரித்து வருகிறார்கள்."

"சதி வழக்குகளின் வரலாறுகளை அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிற காங்கிரஸ் நண்பர்கள், எங்கள்மீது தொடரப்பட்டுள்ள சதி வழக்கு பற்றியும் நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

என்று, காஞ்சிபுரத்தில் 22—8—54-ல் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக இரண்டாவது அரசியல் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தூத்துக்குடி தோழர் இரா. க. தங்கப்பழம் அவர்கள் குறிப்பிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

சமுதாய மாற்றம்: சட்டத்தால் சாதிக்க முடியாது!

★

"இந்த சமூக சீர்திருத்தத்தை சட்டத்தால் செய்ய முடியாது. சமுதாயப் புரட்சி மூலம் மக்களை தாங்களாகவே உணரும்படி செய்து, அவர்களாகவே, சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டால்தான், செய்யப்படும் சீர்திருத்தம் நிலைக்க முடியும்."

"சட்டங்களால் ஒருவரை எளிதில் பணிய வைக்க முடியாது; அப்படி முடிந்தாலும் அது நீடிக்காது; சட்டங்களால் எதையும் வெகு காலத்திற்கு நிலைக்க வைக்க முடியாது."

—காஞ்சி சமூக சீர்திருத்த மாநாட்டில்
கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

நம் நாடு

சென்னை 25—8—54 புதன்

அவர் தந்த விளக்கம்!

"இந்தியா—இலங்கை ஒப்பந்தம், நாம் எதிர்பார்த்தபடி அமுல் நடத்தப்படவில்லை யென்றே கொள்ளலாம்"

என்று இந்திய மக்கள் சபையில் உதவி வெளிநாட்டமைச்சர், கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் கூறியுள்ளார். ஆனால், இலங்கை—இந்தியா ஒப்பந்தம் சரிவர அமுல் நடத்தப்படவில்லை என்கிற போது, அதற்காக இந்திய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை உதவி அமைச்சர் சந்தா கூறவில்லை.

இலங்கை இந்தியர் பிரச்சினையில், ஆரம்ப முதலே டில்லி ஆட்சியாளர் அலட்சிய மனோபாவத்துடன் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததுதான்!

அனுதாபத்துடன் கவனிக்க வேண்டிய பிரச்சினை மட்டுமல்ல, இது; ஆழ்ந்த அனுதாபமும், அவசர உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காத நிடித்த சிந்தனைக்கும் பின்னும் கவனிக்க வேண்டிய பிரச்சினை இது!

இலங்கையில் வதியும் திராவிடர்களின் நிலையை நேரு சர்க்கார் உணரவில்லை என்பதை பலர் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம், நேரு—கொத்தலாவலை ஒப்பந்தம் பற்றி தனது கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளதுடன், இந்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை வாழ் இந்திய மக்களுக்கு ஏற்படவிருக்கும் அபாயம் பற்றியும் எடுத்துக்கூறி, ஆட்சியாளரை எச்சரித்திருக்கிறது.

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தாய்நாடு திரும்பும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது!

அவர்களை வரவேற்கவோ, அவர்களது புனர் அமைப்புக்கோ ஆட்சியிலிருப்போர் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் தி. மு. கழகம் எடுத்துக் காட்டியிருக்கிறது.

'ஏக இந்தியா' என்று பேசும் டில்லி சர்க்கார், அகதிகள் புனர் வாழ்வுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டார்கள்.

'இங்கேது தாயகம் திரும்பும் இலங்கை இந்தியர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்டபோது, சென்ற மாதம், இந்திய நிதி அமைச்சர் தேஷ்முக் அவர்கள், 'அது சென்னை சர்க்காரின் பொறுப்பு' என்றார்.

'ஐயாயிரம் பேர் அடுத்த மாதம் வருகிறார்களே; அவர்களுக்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்களா?' என்றார், 'அது மிகவும் சாதாரண விஷயம்; பெரியதோர் பிரச்சினை அல்ல; 5000 பேர் திரும்பி விடுவதால் தொல்லை ஏதும் ஏற்படாது' என்று சென்னையின் ஆட்சி நடத்துவோர் பதில் தருகிறார்கள்.

டில்லி பாராளுமன்றத்தில் வெளிய அமைச்சர் சந்தா, 'தாய்நாடு திரும்பும் இலங்கை இந்தியர்களுக்குச் செய்யும் உதவிகள்பற்றி சென்னை, திரு—கொச்சி சர்க்கார்களுடன் கலந்து ஆலோசிக்கிறோம்,' என்று கூறியிருக்கிறார்.

இந்தப் போக்கு, இலங்கையிலிருந்து தாயகம் புறப்படும் மக்களுக்கு நம்பிக்கையளிப்பதாகக் காணோம்.

இந்திய சர்க்காரும், சம்பந்தப்பட்ட ராஜ்ய சர்க்கார்களும் இனிமேலாவது தாயகம் திரும்பும் இலங்கை இந்தியர்கள்மீது அதிகக் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

நேரு—கொத்தலாவலை ஒப்பந்தம், சரிவர அமுல் நடத்தப்படவில்லையென்றே கொள்ளலாம்,' என்று நேருவின் தலைமையில் இயங்கும் இலாகா இப்போதாவது உணர்ந்து கொண்டது குறிப்பிடத்தக்க செய்திதான்!

நிலைமை இப்படி இருக்கும்போது, டில்லி சர்க்கார், உடனே மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

ஏன், இலங்கை—இந்திய ஒப்பந்தம் சரிவர அமுல் நடத்தப்படவில்லை? இதற்கு யார் காரணம்? இந்திய சர்க்காரின் ஒப்பந்தம் இல்லாமலே 25 ஆயிரம் பேர்களை வெளியேற்ற இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதே, அது ஏன் தடுக்கப்படவில்லை —தடுக்க முடியவில்லை என்பதை பண்டிதரின் சர்க்கார் ஆராய வேண்டும்.

நேரு—கொத்தலாவலை ஒப்பந்தம், உண்மையிலேயே நமக்கு நன்மை பயப்பதாக இல்லையென்பதை அவர்கள் உணர வேண்டும்.

தங்களின் திறமையற்ற போக்கால் ஏற்பட்டுள்ள விளைவுகளைப் போக்க டில்லி முன்வர வேண்டும்.

ஒப்பந்தம் செய்யும்போது இந்திய சர்க்காரிடம் காணப்பட்ட பொறுப்பற்ற போக்கினால் இலங்கையில் வாழும் நமது மக்களில் பலர், 'நாடற்றவர்கள்' என்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

"நாடற்றவர்களை இலங்கை சர்க்கார் அங்கீகரிக்கவில்லை; அத்தகையவர்கள் விரும்பினால், இந்தியப் பிரஜைகளாகலாம்; அவர்கள் அப்படிச் செய்யத் தவறினால், அல்லது அவர்கள் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் உள்ள விதிகளைத் திருப்தி செய்யாவிட்டால் அவர்களுக்கும் பொறுப்பேற்றுக் கொள்ள இந்திய சர்க்காரால் முடியாது."

நாடற்றவர்கள் என்ற நிலைக்கு உள்ளாகும் மக்கள் பற்றி உதவி அமைச்சர் சந்தா கூறிய பதில் இது!

'இலங்கை சர்க்காரும் அவர்களுக்கு இடம் அளிக்காது; இந்திய சர்க்காரும் அவர்களை ஏற்றுக் கொள்ளாது,' என்கிறார் அமைச்சர்!

பின்னர் அவர்களின் நிலைமை என்ன? யார் அவர்களை ஆதரிப்பது? பொறுப்பு வாய்ந்த அமைச்சர் இப்படிப் பேசுவது நேர்மையா?

தொல்லைக்கு உட்பட்டு நின்றுவோர், தங்கள் நாட்டினர் என்ற எண்ணமிருந்தால் சந்தா இப்படிச்சொல்லியிருப்பாரா?

அகதிகள் பிரச்சினையில் இப்படியா பேசினார்கள்? இப்படியா விளக்கம் கூறினார்கள்?

இலங்கையிலிருந்து வெளியேற்றப்படுவோர், திராவிடர்கள்!

இந்தியாவின் ஆட்சிப் பீடமே வடவரின் கைகளில் சிக்கியிருக்கிறது!

இதை, இந்த நாட்டு மக்கள் உணர வேண்டும்!

வடநாட்டு ஆதிபத்திய அதிபர்களுக்கு, தென்னகத்து மக்கள்மீது அன்பில்லை என்றும், கோபம் கொள்வோர், மக்கள் சபையில் உதவி அமைச்சர் சந்தாவின் பொறுப்பற்ற பேச்சை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறோம்.

இந்த வேதனை தீர வழி என்ன என்று சிந்தியுங்கள்!

அமெரிக்காவின் 'தோல்வி முகம்'!

பிரான்ஸ் வீசிய 'குண்டு' வெடித்தது!

பிரஸ்ஸல்ஸ் மாநாடு புகைந்தது

அமெரிக்க யோசனையின் பேரில், அதனிடம் உதவி பெற்றாக வேண்டிய நிலையிலுள்ள சில ஐரோப்பிய நாடுகளால், ஐரோப்பிய இராணுவ உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்ள பிரஸ்ஸல்ஸ் நகரில் கூட்டப்பட்ட மாநாட்டில் உடன்பாடு ஏதும் ஏற்படாமல் தோல்வியுடன் கலைந்தன.

பெரு நாட்களாகவே உருவாகி வந்திருக்கும் ஒரு திட்டத்தை பிரஸ்ஸல்ஸ் மாநாட்டின் மூலம் ஊர்ஜிதப்படுத்தி அமுலுக்குக் கொண்டுவர, அமெரிக்கா பெரிதும் துடியாய் இருந்தது.

ஐரோப்பிய இராணுவ உடன்படிக்கையில் தங்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும் என்று நினைக்கும் மற்ற (அமெரிக்க உதவி பெறும்) நாடுகளும் மாநாட்டை வெற்றிகரமாக முடிப்பதில் பெரும் அக்கறை காட்டின.

என்றாலும், மாநாடு தோல்வியில் முடிந்தது. இந்தத் தோல்வியானது ஐரோப்பிய மண்டலத்திலே அமெரிக்காவுக்கிருக்கும் செல்வாக்கு ஆட்டங்கண்டுவிட்டதாகக் கருதப்பட வேண்டியதாகும் என விஷயமறிந்த வட்டாரங்கள் கருத்து தெரிவிக்கின்றன.

மேற்படி மாநாட்டில், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஹாலந்து, பெல்ஜியம், லக்சம்பர்க், இத்தாலி ஆகிய நாடுகள் கலந்துகொண்டிருக்கின்றன.

மாநாடு பிசுபிசுத்துப் போக, பிரான்ஸ் நாடுதான் காரணமாயிருந்தது. ஐரோப்பிய இராணுவ உடன்படிக்கைக்காகத் தயாரிக்கப்பட்ட அசல் திட்டத்தை அப்படியே ஒப்புக்கொள்ள பிரான்ஸ் தயங்கித்தயங்கிக் காலம் கழித்தது.

1952-ம் ஆண்டு மே மாதத்திலேயே ஐரோப்பிய கூட்டுப் பாதுகாப்புத் திட்டத்தின் நகல் பூர்வாங்கமானதாக ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டதென்றாலும், அந்தத் திட்டத்தின் நகல், குழுவில் சம்பந்தப்பட்ட அவ்வா நாடுகளுடைய பார்லிமெண்டிலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என்ற சம்பிரதாயமும் இருக்கிறது.

இந்தச் சம்பிரதாயச் சடங்கை, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தவிர, மற்ற எல்லா நாடுகளும் நிறைவேற்றி வைத்துவிட்டு இறுதி முடிவுக்காகக் காத்துக் கிடந்தன.

இத்தாலியப் பார்லிமெண்டில், எப்படியும் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டுவிடுமென்ற நம்பிக்கை, இத்தாலிய ஆட்சியாளருக்கு இருக்கிறது.

இப்போதுள்ள தொல்லையெல்லாம் பிரான்ஸ் நாட்டின் பார்லிமெண்ட் திட்டத்தை ஒப்புக்கொண்டு, அமெரிக்க நிழலில் தன் நாடு 'பாதுகாப்பு பெற்று' வாழ வேண்டுமென்று தீர்மானிக்குமா என்பதேயாகும்.

இதுவரை பிரான்ஸ் நாட்டின் பிரதமர்களாகப் பதவி வகித்து அதே நோக்கில் அமெரிக்காவின் செல்லப் பிள்ளைகளாக நடந்து வருவதில் கவனஞ் செலுத்திய மற்ற தோழர்களே, பார்லிமெண்டின் சமர்ப்பிக்கத் துணியாத மேற்படி கூட்டுப் பாதுகாப்பு திட்டத்தை, அமெரிக்காவாவது, ஆட்டுக்குட்டியாவது' என்று பேசி, இந்தோ-சீனாவில் சமாதானத்துக்கு வழி செய்த மெண்டஸ்-பிரான்ஸ் சமர்ப்பிப்பார் என்றும், அதற்கான பார்லிமெண்டின் அனுமதியைப் பெறுவார் என்றும் யாரும் எதிர்பார்க்க முடியாது!

ஆகவேதான், அசல் திட்டத்தை அப்படியே பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக, சில மாற்றங்களைச் செய்து அசல் திட்டத்திலுள்ள 'கெடு'வைக்குறைத்து, அதன் பிறகு பார்லிமெண்டுக்குக் கொண்டு வரலாம் என்று மெண்டஸ்-பிரான்ஸ் கருதி, அதன்படியே சில திருத்தங்களைக் கொண்டு வந்தார்.

அட்லாண்டிக் சாசனத்தின் ஒரு கூறாகவே, இந்த ஐரோப்பிய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் கருதப்பட வேண்டும் என்றும், கூட்டுப் பாதுகாப்புக் குழுவின் தலைமைக் காரியாலயம், வட அட்லாண்டிக் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் காரியாலயத்தைப் போல, பாரிஸ் நகரிலேயே நிறுவப்பட வேண்டுமென்றும், பிரான்ஸ் தாய ஒப்பந்தத்தின்படி ஆங்கிலோ—அமெரிக்க நாடுகளின் துருப்புகள் திரும்ப அழைத்துக் கொள்ளப்படும் போது, குழுவிலிருந்து விலகத் தான் விரும்பினால், அதற்கு எந்தவித கட்டுத்திட்டமும் இருக்கக் கூடாதெனவும், அதேபோல, இப்போது இரு கூறாகப் பிரிக்கப்பட்டிருக்கும் ஜெர்மனி மீண்டும் ஒன்று சேர்க்கப்படுமோ

ஆரம்ப ஆசிரியர் சம்பள உயர்வு

இந்திய சர்க்கார் பரிசீலிக்கிறது

புதுடில்லி, ஆக. 23—

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சம்பள விகிதத்தில் அதிருப்தியான நிலை ஏற்பட்டுள்ளதை ராஜ்ய சர்க்கார்களின் கவனத்திற்கு இந்திய சர்க்கார் கொண்டு வந்திருப்பதாக கல்வி அமைச்சரின் பார்லிமெண்டரி காரியதரிசி இந்திய மேல் சபையில் கூறினார்.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை ராஜ்ய சர்க்கார்கள் உயர்த்துவதில் என்ன உதவி அளிக்கலாம் என்பதை இந்திய சர்க்காரே பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மதுராவில் 164 பேர் கைது!

விக்கிரக உடைப்பின் எதிரொலி

ஆக்ரா, ஆக. 23—

மதுராவில் நேற்று கிருஷ்ணன் பொம்மை உடைப்பு சம்பந்தமாக ஏற்பட்ட கலவரத்தை ஒட்டி இதுவரை 164 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களில் 109 பேர் தண்டிக்கப்பட்டனர் என்றும் தெரிகிறது.

இன்று மாலை சில மணி நேரங்கள் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு மீண்டும் இரவு 7 மணிக்கு அமுல் செய்யப்பட்டது.

இன்று காலை சிலர் மசூதி ஒன்றில் கலகம் செய்து சுவரொன்றை உடைத்தனர் என்று தெரிகிறது.

திரு—தமிழர் அறப்போர்

மக்கள் சபையில் கேள்வி

புதுடில்லி, ஆக. 23—

ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் இடைக்கால அறிக்கை ஏதும் சமர்ப்பிக்கவில்லை என்றும், அது, அக்கமிஷனின் விருப்பம் என்றும், உதவி உள்நாட்டு அமைச்சர் டி. என். தத்தர் இந்திய மேல்சபையில் கூறினார்.

"சில ராஜ்யங்களில் பெரிய அளவில் கிளர்ச்சி நடைபெறுவதாலும், ராஜ்ய சர்க்கார்கள் அந்த இயக்கங்களை ஒடுக்கி வருவதாலும், ஒரு இடைக்கால அறிக்கையைக் கோரிப் பெறுவது நல்லது அல்லவா?" என்று கேட்கப்பட்டபோது, "ஒரு இயக்கத்தை எந்த ராஜ்ய சர்க்காரும், ஒடுக்குவதாக எனக்குத் தகவல் கிடையாது," என்று அமைச்சர் கூறினார்.

'மொழிவாரி பிரிவினைக்கு சமாதானமான கிளர்ச்சி நடத்திய வர்கள் மீதுதான் துப்பாக்கிப் பிரயோகமும், தடியடியும் நடந்திருக்கிறதல்லவா?" என்று கேட்டதற்கு, பதில் அளிக்கப்படவில்லை.

னால், அப்போதும் குழுவிலிருந்து விலகிக் கொள்ளத் தனக்கு உரிமை இருக்கவேண்டும் என்றும் பிரெஞ்சு திருத்

(4-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

போலீஸ் ஜமேதார் சாட்சியம்

வழக்கறிஞர்கள் குறுக்கு விசாரணை

18—8—53 பகல் 11 மணிக்கு நெல்லை அடிசனல் செசன்ஸ் நீதிபதி திரு. ராதாகிருஷ்ண முதலியார் முன்னிலையில், தொடர்ந்து தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை ஆரம்பமாயிற்று. சர்க்கார் தரப்பு சாட்சி மலபார் விசேட போலீஸ் ஜமேதார் விசுவநாத நாயகரை சர்க்கார் வக்கீல் விசாரணை செய்தார். அப்பொழுது சாட்சி கூறியதாவது:—

“நான் மலபார் ஸ்பெஷல் போலீஸ் ஜமேதார்; 1953 ஜூலை 14-ம் தேதி நான் தூத்துக்குடி ரயில்வே ஸ்டேஷனுக்கு பாதுகாப்புக்கு, 10 பேர்களுடன் சென்றேன்; மத்தியானம் 1-மணிக்கு வந்து சேர்ந்தேன். 15-ம் தேதி காலை, தூத்துக்குடி எக்ஸ்பிரசை ‘எஸ்கார்ட்’ செய்து எழும்பூர் செல்வது எனக்கு வேலை, காலையில் 6 மணிக்கு பிளாட்பாரத்தில் நின்றோம்; 6-25 காலை அங்கிருந்து வண்டி புறப்பட்டது; 7-30 காலை, டி. எஸ். பி. உத்திரவுப்படி மேலூர் ஸ்டேஷனுக்கு வரும்படி அழைக்கப்பட்டோம்; 7-40-க்கு, எனது குழுவுடன் மேலூர் ஸ்டேஷனுக்கு சென்றோம்; மேலூர் ஸ்டேஷனில் வண்டி நின்று கொண்டிருந்தது; எங்களுக்கு முன்னால் ரிசர்வ் போலீஸ் அங்கு நின்றுகொண்டிருந்தது ரயில்வே தண்டவாளத்துக்கு முன்னால் சுமார் 150 பேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்; சுமார் 1,000 பேர் வண்டிக்கு முன்னால் தெற்கு; மேற்கு, வடக்குப் புறமாகக் கூடியிருந்தார்கள்; கூட்டத்திலிருந்தவர்கள் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள்; டி. எஸ். பி., சப் கலெக்டர் தாசில்தார் ஆகியோர் இருந்தார்கள்; டி. எஸ். பி, ரிசர்வ் போலீசை ‘ரிலீவ்’ பண்ணுவதற்கு எங்களுக்கு உத்தரவு கொடுத்தார்; ரிசர்வ் போலீசார் வடபுறம் போனார்கள்; கலெக்டர் வந்து யாருடனோ பேசிக்கொண்டிருந்தார்; வெளியிலிருந்த ரிசர்வ் லாரியிலிருந்து சிலர் இறங்கி தண்டவாளத்தில் வந்து உட்கார்ந்தார்கள்; கூட்டத்திலிருந்து, சத்தம் போட்டு கல்லெறிந்தார்கள்; டி. எஸ். பி தடியடிப் பிரயோகத்திற்கு எச்சரிக்கை கொடுத்தார்; நான் நான் எச்சரிக்கை கொடுத்து, தடியடிப் பிரயோகம் செய்தோம்; தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தோம்; உட்கார்ந்திருந்தவர்களில் சிலர் படுத்துக்கொண்டார்கள்; உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர், எங்களில் ஒருவர் லைபிளைப் பிடித்தார்; ஆனால் பிடுங்கவில்லை. பாஸ்கரன் என்னும் எங்கள் கான்ஸ்டபிள் மீது கல் வந்து விழுந்தது; இன்னொரு கல் மற்றொரு கான்ஸ்டபிள் மீது விழுந்தது; உடனே டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு கடைசி எச்சரிக்கை கொடுத்தார்; பிறகு அவர் கலெக்டரிடம் சென்று பேசிக்கொண்டிருந்தார்; பிறகு ரிசர்வ் குழுவும் சுடப் போவதாக எச்சரிக்கை கொடுத்தது; உடனே சுடும் சத்தம் கேட்டது. தென் மேற்கிலிருந்த கூட்டம் எங்களை நோக்கி வந்தது; டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு சுடுவதற்கு எனக்கு உத்திரவு கொடுத்தார்; கூட்டம் கலையவில்லை; சுடச் சொன்னார்; எங்கள் குழு 8 ரவுண்டு சுட்டது; தென்மேற்கு நோக்கி சுட்டோம்; பிறகு கூட்டம் கலைந்தது; வண்டி புறப்பட்டது; பிறகு வெடித்த ‘கேஸ்’களை பொறுக்கி டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டிடம் கொடுத்தோம்; காயப்பட்டவர்களை போலீஸ் லாரியில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள்; ஜெயராஜும் அந்த லாரியில் கொண்டு போகப்பட்டார்; பிறகு மத்தியானம் 2 மணிக்கு புறப்பட்ட தூத்துக்குடி எக்ஸ்பிரசை ‘எஸ்கார்ட்’ செய்து எழும்பூர் சென்றோம்; 17—7—53ல், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.”

எதிர்தரப்பு சார்பில் வழக்கறிஞர் பி. எ. தங்கசாமி நாடார் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார். சாட்சி கூறியதாவது:—

“மேலூர் ஸ்டேஷனுக்கு சம்பவத்துக்கு முன்னால் நான் போனதில்லை; மேலூர் ஸ்டேஷன் கட்டடம் தண்டவாளத்துக்கு வடபாகத்தில் இருக்கிறது; ரயில் தண்டவாளத்துக்கு வலது புறமும் இடதுபுறமும் இடமிருக்கிறது; சுற்றி வேலி இருக்கிறது; நான் மேலூர் ஸ்டேஷன் போய் சேரும் பொழுது மணி காலை 7-45; மேலூரைவிட்டுப் புறப்படும் பொழுது சுமார் 9 மணி இருக்கும்; ரயிலின் கடைசி பெட்டிக்கும் ஸ்டேஷனுக்கும் 1 பர்லாங் தூரம் இருக்கும்; 50 கெஜம் தூரத்தில் 150 பேர் உட்கார்ந்திருந்தார்கள்; மும்மூன்று பேராக உட்கார்ந்திருந்தார்கள்; எங்களுக்கும் இஞ்சினுக்கும் இடையில் கூட்டம் இல்லை; 1000 பேரும் காம்பவுண்டுக்கு வெளியே இருந்தவர்கள்—காம்பவுண்டுக்கு உள்ளும் வெளியும் இருந்தார்கள்; முதலில் நாங்கள் போகும்பொழுது சுமார் எவ்வளவு பேர இருந்தார்களென சொல்ல முடியாது; ஆட்கள் நின்றுகொண்டிருந்தார்கள்; மேலும் மேலும் கூட்டம் பெருகியது; நாங்கள் தடியடிப் பிரயோகம் செய்யும்பொழுது தண்டவாளத்திலிருந்த 150 பேரும் அசையவில்லை; தடியடிப் பிரயோகம் செய்யும்பொழுது வெளியே நெருக்கமாக கூட்டம் இருந்தது; லாரியிலிருந்து எத்தனை பேர் வந்தார்களென கவனிக்கவில்லை; அவர்களில் எத்தனை பேர் தண்டவாளத்தில் உட்கார்ந்தார்களென சொல்ல முடியாது; லாரியிலிருந்து இறங்கியவர்கள் மேற்கே போய் உட்கார்ந்தார்கள்; எஞ்சின் பக்கமிருந்து எச்சரிக்கை கொடுத்தோம்; வாயினால்தான் சத்தம் போட்டோம்; ரயில் காம்பவுண்டுக்கு வெளியே ஏராளமாகக் கூட்டம் கூடிற்று; பெரிய இரைச்சலாக இருந்தது; ‘மெகபோன்’ வைத்து நாங்கள் எச்சரிக்கவில்லை; தடியடி பிரயோகத்திற்கும் பிறகு கண்ணீர்ப் புகை பிரயோகிக்கவில்லை; தடியடிப் பிரயோகத்தினால் காயம் ஏற்பட்டிருக்கலாம்; நான் ஒருவர் காயத்தையும் பார்க்கவில்லை; தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் கல்லெறியவில்லை; லைபிளை பிடித்து இழுத்ததை நான் நேரில் பார்த்தேன்; லைபிள், தோளில் இருக்கும் பொழுதுதான் பிடித்து இழுத்தார்கள்; லைபிள் வைத்திருந்தவர் ராமன் நாயர்; இன்னொருவர் உதவியுடன் லைபிள் மீட்கப்பட்டது; அந்தக் கான்ஸ்டபிள் யார் என்று சொல்ல முடியாது; 10 பேரில் ஒருவர்; தடியடிப் பிரயோகம் செய்ததால் தண்டவாளத்தில் இருந்தவர்கள் போகவில்லை; 8½ மணிக்குத்தான் எழுந்து போனார்கள்; லாரியிலிருந்து வந்து உட்கார்ந்தவர்களை அதிகாரிகள் யாரும் தடுக்கவில்லை; ரிசர்வ் போலீசுதான் வடபாகத்தில் (காம்பவுண்டுக்கு வெளியே) முதலில் சுட்டார்கள்; எப்படிச் சுட்டார்கள் என்று தெரியாது; கீழ்க் கோர்ட்டில் இப்படி நான் சொல்லவில்லை; நாங்கள் 100 கெஜம் தள்ளிச் சென்று கண்ட பக்கமும் சுடவில்லை; நாங்கள் தெற்கிலிருந்து மேற்கு பார்த்து சுட்டோம்; நாங்கள் எஞ்சின் பக்கமிருந்துதான் சுட்டோம்; எங்களிடமிருந்த குண்டுகள் நேரே போய் திரும்பக் கூடியவைகள் அல்ல; நாங்கள் வடமேற்கு நோக்கி சுடவில்லை; நாங்களும் தண்டவாளத்துக்கு வெளியே இருந்த ஆட்களைப் பார்த்துத்தான் சுட்டோம்; அங்கே வீடுகள் எல்லாம் இருக்கின்றன; வீட்டில் உள்ள ஆட்களுக்கு அடிபட்டிருக்கலாம்; துப்பாக்கிப் பிரயோகத்தால் ஜனங்கள் நாலாபக்கமும் சிதறி ஓடிவிட்டார்கள்.”

இரண்டாவதாக, சாட்சியை வழக்கறிஞர் எம். செல்லையப்ப பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

“தென்மேற்கே சுட்டது மலபார் ஸ்பெசல் போலீஸ் தான்; ரயில் தண்டவாளத்துக்கு வெளியே தெற்கே திண்ணையில் உட்கார்ந்திருந்தவர் குண்டு பட்டு இறந்தது தெரியாது; தண்டவாளத்துக்கும் தெற்கே உள்ள காம்பவுண்டுக்கும் உள்ள தூரம் தெரியாது; துப்பாக்கிப் பிரயோகத்தால் ஸ்தலத்தில் எத்தனை பேர் இறந்தார்களென தெரியாது; எத்தனை பேருக்குக் காயம் என்பதும் ஸ்தலத்தில் தெரியாது; நான் இருக்கும்பொழுது அதிகாரிகள் கூட்டம் இருந்தது; மொத்தம் எத்தனை அதிகாரிகளெனத் தெரியாது; டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு அல்லது கலெக்டர் தண்டவாளத்தில் உட்கார்ந்தவர்களிடம் பேசியது எனக்குத் தெரியாது; ஆட்களைச் சுடுவதற்கு முன்னால் ஆகாயத்தைப் பார்த்தும் சுடவில்லை; அப்படி சுடுவது வழக்கமில்லை; ரயிலில் கடைசி வண்டிக்குப் பின்னால் கூட்டம் இருந்ததா இல்லையா வெனத் தெரியாது; தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் கதர்க் குல்லாய், சிவப்பு சட்டை அணிந்திருந்ததை நான் கவனிக்கவில்லை; கருப்புச் சட்டை போட்டிருந்ததையும் கவனிக்கவில்லை; எனக்கு மலபார்; எஞ்சினுக்கு முன்னால் இடது புறமிருந்து எச்சரிக்கை செய்தேன்.”

மூன்றாவதாக, வழக்கறிஞர் பி. எஸ். கந்தையா பிள்ளை சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார். சாட்சி கூறியதாவது:—

“ரிசர்வ் போலீசார் 7 அல்லது 8 பேர் இருந்தார்கள்; நாங்கள் 10 பேர்; நாங்கள், உட்கார்ந்திருந்தவர்களுக்கும் எஞ்சினுக்கும் மத்தியில் தண்டவாளத்தில் இருந்தோம்; ரயில் புறப்பட்டால் முதலில் எங்களைக் கடந்து தான் போக வேண்டும்; ரிசர்வ் போலீசார் வடபாகத்தில இருந்தார்கள்; தண்டவாளத்துக்கு வெளியிலிருந்து கல் விழுந்தது; வடக்கும் தெற்கும் கூட்டமிருந்தது; கூட்டத்தில், பெண்கள் இருந்ததாகச் சொல்ல முடியாது; கூட்டத்தில் பையன்கள் இல்லை; இருபுறமும் 1,000 பேர் சுமாராக இருப்பார்கள்; தென் மேற்கிலிருந்து கல் விழுந்தது; இரண்டுகல் விழுந்தது; சுடுவதற்கு முன் எச்சரிக்கை செய்தோம்; கல் போட்டவனைப் பார்த்துச் சுட்டோம்; கல் போட்டவர்கள் தெரிந்தது; ஒரு ரவுண்டுக்கு ஒரு ஆளை கொல்ல முடியும்; 4 பேர் 8-ரவுண்டுகள் சுட்டோம்; ரிசர்வ் குழு சுட்டது தெரியாது; நான் தான், நேரடியாகச் சுடுவதற்கு ‘உத்தரவு’ கொடுத்தேன்; எத்தனை பேர் இறந்தார்களெனத் தெரியாது; சுடும்பொழுது தண்டவாளத்திலிருந்தவர்கள் இருந்தார்களா, இல்லையாவெனத் தெரியாது; தண்டவாளத்திலிருந்தவர்கள் வெளியே போன பிறகுதான் சுட்டார்களா என்பதும் தெரியாது.”

கடைசியாக இரா. இளம்வழுதி (தண்டபாணி) சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார். சாட்சி கூறியதாவது:—

“நாங்கள் நின்ற இடத்திலிருந்து 4 அல்லது 5 கெஜத்துக்கு அப்பால் உட்கார்ந்திருந்தார்கள்; எங்கள் குழு தடியடிப் பிரயோகம் செய்தது; தடியடிப் பிரயோகம் நடக்கும்பொழுது நான் எஞ்சினுக்கு பக்கம்தான் இருந்தேன்; எங்கள் குழுவிடம் மெஷின் துப்பாக்கி இருந்தது; மெஷின் துப்பாக்கியால் சுடவில்லை; சாதாரண லைபிளால் சுட்டோம்; காம்பவுண்டுக்கு வெளியே போய் சுடவில்லை; சுடும்பொழுது மணி 9 இருக்கும்; சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரிக்கும்பொழுது ராமநாயர் லைபிளை இழுத்ததாக நான் சொல்லவில்லை; கீழ்க்கோர்ட் விசாரணையிலும் சொல்லவில்லை—சொல்லியிருக்கலாம்.”

5-வது சாட்சியாக, ரிட்டயர்டு சப்-ரிஜிஸ்திரார் செல்லம் ஐயங்காரை சர்க்கார் தரப்பு வக்கீல் விசாரித்தபொழுது சாட்சி கூறியதாவது:—

“நான், ரிட்டயர்டு சப்-ரிஜிஸ்திரார்; ஆண்டாள் தெருவில் குடியிருக்கிறேன்; மேலூர் ரயில்வே ஸ்டேசனுக்கு வடமேற்கு; மேலூர் ஸ்டேசனுக்கு 120 அடி தூரத்தில் வண்டி நின்றது; வெளியே இருபுறமும் கூட்டம் இருந்தது; ரயில்வே லைனில் உட்கார்ந்திருந்தார்கள்; ‘நேரு சர்க்கார் ஒழிக,’ ‘ஆச்சாரியார் சர்க்கார் ஒழிக,’ ‘போலீஸ் ஆட்சி ஒழிக’ என்று கோஷமிட்டார்கள்; சப்-இன்ஸ்பெக்டர் டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டுக்கு ஆள் அனுப்பினர்; பிறகு, சப்-கலெக்டருக்கு சொல்லி அனுப்பினார்கள்; சப்-கலெக்டர், தலைவரைக் கூப்பிட்டு, போய்விடுங்கள் என்று சொன்னார்; அவர் மறுத்தார்; 5 அல்லது 6 பேரைக் கைது செய்தனர்; தடியடிப் பிரயோகம் செய்தார்கள்; உட்கார்ந்திருந்தவர்கள் மீதும் தடியடிப் பிரயோகம் செய்தனர்; ரிசர்வ் போலீசார் அடித்தனர்; பின்புறமிருந்தவர்கள் கல்லெறிந்தார்கள்; போலீஸ் லாரியிலிருந்த தலைவரைக் கூப்பிட்டு, கலெக்டர் பேசினார்; தலைவர், தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவர்களிடம் பேசினார்; பிறகு தலைவரும் கூட்டத்தில் உட்கார்ந்துகொண்டார்; தண்டவாளத்திலிருந்தவர்கள் கலைந்து போகவில்லை; மலபார் போலீஸ் வந்தது; பக்கத்து வீதிகளையெல்லாம் கதவடைக்கச் சொன்னார்கள்; நானும் வீட்டுக்குள் போய் கதவடைத்துக் கொண்டேன்; கொஞ்ச நேரம் கழித்துச் சுட்டார்கள்; ரயில் போய்விட்டது; கதவைத் திறந்து பார்த்ததில் சிலர் கீழே விழுந்து கிடந்தார்கள்; கலெக்டர் உத்திரவுப்படி நாங்கள் கீழே கிடந்தவர்களுக்கு தண்ணீர் கொடுத்தோம்; டாக்டர் ரங்கசாமி காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்தார்; என் வீட்டுக்கும் எஞ்சின் நின்ற இடத்துக்கும் 25 அல்லது 30 அடி தூரம் இருக்கும்; வீட்டு வாசலில் நின்று பார்த்தேன்; சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.”

சாட்சியை, எதிர் தரப்பில் வழக்கறிஞர் எம். செல்லையப்ப பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

“என் வீட்டுக்கு மேல் பக்கம் காஸ்மாபாலிட்டன் கிளப் இருக்கிறது; ஆண்டாள் தெருவில் பிராமணர்கள் வீடு எத்தனை என்று கூற முடியாது; நான் கதவை அடைக்கும்போது 8½ அல்லது 8¾ மணி இருக்கும்; அதுவரை வீட்டு வாசற்படியில் நின்றுதான் பார்த்தேன்; ஆண்டாள் தெருவில் ஆயிரக்கணக்கான கூட்டம் இருந்தது; என் வீட்டிலிருந்து பார்த்தால் தண்டவாளத்திலிருந்தவர்களெல்லாம் தெரிந்தது; தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் 100 பேர் இருக்கும்; உட்கார்ந்திருந்தவர்களைத் தவிர, ரயிலின் கடைசி வண்டிக்கும் பின்னால் கூட்டம் இல்லை; மறுநாளே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம், ‘நேரு ஆட்சி ஒழிக,’ என்று கோஷம் போட்டதை சொல்லியிருக்கிறேன்; சப்-இன்ஸ்பெக்டர் மூலமாக இருக்கலாம்; ஆண்டாள் தெருவுக்கு போலீஸ் அதிகாரிகள் வந்தார்கள்; டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு வந்தார்; என்னைப்போல பலரும் தெருவில் நின்று பார்த்தார்கள்; ரிசர்வ் போலீசார் 8 அல்லது 10 பேர் தடியடிப் பிரயோகம் செய்தனர்; கூட்டத்தில் எனக்கு இனம் தெரிந்தவர்கள் ஒருவரும் கிடையாது; நான் ஒருவரிடமும் பேசவில்லை; நான் நின்றதை யார் பார்த்தார்கள் என்று பெயர் சொல்லிக் கூற முடியாது; சில முனிசிபல் சிப்பந்திகள் என்னுடன் நின்றார்கள்; சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடமும் நான் இதைச் சொல்லவில்லை; முனிசிபல் சிப்பந்தியை விசாரித்தது எனக்குத் தெரியாது; ஆண்டாள் தெருவில் 20 அல்லது 25 பேர் காயப்பட்டுக் கிடந்ததை நான் பார்க்கவில்லை; நான், 6 பேர் காயப்பட்டுக் கிடந்ததைப் பார்த்தேன்; இறந்தவர்கள் எத்தனை பேர் என்று கூற முடியாது.”

6-வது சாட்சியாக மலபார் போலீஸ் பாஸ்கரனை சர்க்கார் தரப்பு வக்கீல் விசாரித்தபொழுது சாட்சி கூறியதாவது:—

“நான் எம். எஸ். பி. போலீஸ்; 1953 ஜூலை 15-ல், தூத்துக்குடிக்கு ஸ்பெஷல் ‘ட்யூட்டி’யாக போனேன்; ஜமேதாருடன் நான் காலை 7-30 மணிக்குப் போனேன்; வண்டி நின்றுகொண்டிருந்தது; 200 பேர் பேர் முன்னால் உட்கார்ந்திருந்தார்கள்; வேறு 2000 பேர் வடக்கும், தெற்கும் நின்றுகொண்டிருந்தார்கள்; எஞ்சினுக்கு முன்னால் ரிசர்வ் போலீசார் நின்றுகொண்டிருந்தார்கள்; ஜமேதார், கூட்டம் எழுந்துபோக வேண்டுமென்று எச்சரிக்கை செய்தார்; உட்கார்ந்திருந்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தோம்; இருபுறமிருந்த ஜனங்கள் முன்னேறி வந்தார்கள்; கூட்டம் எங்கள் மீது கல்லெறிந்தது; என் கால்மீது கல் பட்டது; ரிசர்வ் போலீஸ் கூட்டத்தைப் பார்த்து சுட்டது; கூட்டம் எங்கள் மீதும் பாய்ந்தது; ஜமேதார் மீண்டும் கலையச் சொல்லி எச்சரிக்கை செய்தார்; நாங்களும் சுட்டோம்; கூட்டம் கலைந்தது; வண்டி புறப்பட்டது; நான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டேன்.”

எதிர்தரப்பில், வழக்கறிஞர் எம். செல்லையப்பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:—

“ரயில்வே காம்பவுண்டுக்குள் கூட்டம் இல்லை; வெளியே கூட்டம் இருந்தது; எஞ்சின் நின்ற இடத்திலும், வடக்கும் தெற்கும் வேலி இருக்கிறது; ஸ்டேஷனுக்கு மேற்கே லெவல் கிராசிங் இருப்பதை நான் கவனிக்கவில்லை; வேலிக்கு உள்ளே, ரயில்வே, போலீஸ் அதிகாரிகள் இருந்தார்கள்; வேறு யாருக்கும் என்னைத் தவிர கல்லடிபட்டதாக எனக்குத் தெரியாது.”

“அந்த இரவு”

★

கடம்பூர் நாடார் உறவின்முறை உயர் துவக்கப்பள்ளி கட்டட நிதிக்காக திரு. எஸ். கே. சாமி தலைமையில் 10—8—54 இரவு 9-30 மணிக்கு மறுமலர்ச்சி நாடக மன்ற குழுவினரால் “அந்த இரவு” நாடகம் நடைபெற்றது.

பொதுச்செயலாளர் பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம், திருவிழாவின்போது தாங்கள் பெற்ற பக்தி உணர்ச்சி பற்றிப் பிறருக்குக் கூறி, பக்தியை வளர்த்திட முடிகிறது. 'திருப்பதி செல்கிறேன்; ஐயனின் திருநடனம் கண்டேன்; சைவத்தின் மாண்பினை உணர்ந்தேன்,' என்றோ, 'திருப்பதி சென்றேன்; திருமலையப்பனைத் தரிசித்தேன்; வைணவத்தின் மேன்மையினைத் தெரிந்து கொண்டேன்,' என்றோ, பக்தர்கள் பேசமாட்டார்கள்!

திருவிழாவில் இடிபட்டது, மிதிபட்டது, பெருங்கூட்டத்தில் சிக்கிச் சிரமப்பட்டது, கோபுர வாயிலில் நின்றிருக்க, கால் பூமியில் படாமலேயே; கூட்டம் தன்னைத் தூக்கிச் சென்று வெளியில் தள்ளிவிட்டது, என்ற இது போன்ற செய்திகளையே கூறுவர்.

இன்னும் சிலர், வெளியே சொல்ல முடியாத அனுபவங்களைப் பெற்றிருப்பவர். பொருள் இழந்தவர், பொருள் பெற்றவர், புது உறவு பெற்றவர்—என்று இப்படி இருக்கும்.

அதுபோல மாநாடுகளில் கலந்து கொண்டு இந்தக் கூடிய கூட்டம், பந்தல் அலங்காரம், கடைக் காட்சிகள், ஒளி விளக்குகள், நீண்ட பிரசங்கங்கள் இவைபற்றி மட்டும் வீடு சென்று பேசினால் பயன் ஏற்படாது.

இங்கு நீங்கள் கேட்ட சொற்பொழிவுகள் மூலம் பெற்ற தெளிவை, உற்சாகத்தை, நம்பிக்கையை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

'காஞ்சிபுரம் மாநாடு சென்றேன்; திருவிதாங்கூர் தமிழர் பிரச்னை குறித்து நெடுஞ்செழியன் பேசினார், கேட்டேன்; எனக்கு அந்தப் பிரச்னையிலே இருந்த சில சந்தேகங்கள் போய்விட்டன; இன்னின்ன பொருள்பற்றி பேசினார்கள், இப்படிப்பட்ட விளக்கம் கிடைத்தது, இத்தகைய ஆதாரம் கிடைத்தது,' என்று எடுத்துக் கூறவேண்டும்.

மாநாடுகள் நடைபெறுவது இதற்காகத்தான்; திருவிழாக் கூட்டமல்ல; தெளிவு பெறும் இடம், மாநாடு! கூட்டு உணர்ச்சியும், கொள்கை எழுச்சியும் பெறவேண்டிய இடம்! இந்த முறையில், மாநாட்டுக்கு வந்திருக்கும் தோழர்கள், இதனைப் பயனுள்ளதாக்கிக்கொள்ள வேண்டும்.

ஜோதிடர் வீட்டுக்குப் போய் திரும்புவருக்கும் டாக்டர் வீட்டுக்குப் போய்விட்டு வருபவருக்கும், வித்தியாசம் உண்டல்லவா! ஜோதிடர் வீட்டிற்குப் போய்த் திரும்புபவர், மகிழ்ச்சியுடன் இருக்கலாம். அவர் கூறியிருப்பார்—'தங்கள் ஜாதகப்படி இனி உனக்கு அதிர்ஷ்டம் பிறக்கும்'—என்று! அதனால் அவனுக்கு ஆனந்தம் ஏற்பட்டிருக்கக் கூடும்.

ஆனால், டாக்டர் வீடு சென்றால், அவர் கூறியிருப்பார்—'உனக்கு இரத்த சோகையும், சயரோகக் குறிகளும் இருப்பதாகத் தெரிகிறது; இவ்வகை மருந்து சாப்பிட வேண்டும்!'—என்று! அதனைக் கேட்டு நமக்கு இரத்தசோகை இருக்கிறதாமே, என்று எண்ணி சோர்வும், கவலையும்கூட அவன் கொள்ளக்கூடும்.

ஆனால், ஜோதிடர் உட்பட யாரும், டாக்டரை நாடித்தான் வேண்டும், கவலை இருக்கும்போது! கவலை எந்தவகையது, அதைப் போக்கிக் கொள்ள உட்கொள்ள வேண்டிய மருந்துகள் யாவை—என்று டாக்டர் கூறக் கேட்டு சோர்வு அடையலாகாது; கவலை போக்கிக்கொள்ள வழி கிடைத்தது என்று மகிழ வேண்டும்.

திருவிழாக்களுக்குப் போவது ஜோதிடர் வீட்டுக்குப் போய் வருவது போன்றது!

மாநாடுகளுக்குப் போவது டாக்டர் வீட்டுக்குப் போய் வருவது போன்றது!

இங்குதான், சமுதாயத்திலே உள்ள சீர்கேடுகள், மதத்தால் விளைந்த கவிவுகள், அரசியலின் கௌரியும் அவதிகள் இவைபற்றி எடுத்துரைக்கப்படும். சோர்வு அடைந்துவிடக் கூடாது; மாறாக, 'தெளிவு பெற்றோம்,' என்று மகிழ வேண்டும்; பிறருக்கும் தெளிவு தர வேண்டும்!

தி. மு. கழகம், நாட்டு மக்களுக்கு ஒரு நல்ல மருத்துவமனை போன்றது!

சமூகத்திலே, மூண்டு கிடக்கும் எல்லா வகையான கவிவுகளுக்கும் மருந்தளித்துக் குணப்படுத்தும் நோக்குடன் பணியாற்றும் அமைப்பு, தி. மு. கழகம்; எனவேதான், இன்று, நமது கழகத்துக்கு நல்லதோர் நிலை ஏற்பட்டிருக்கிறது.

நாம் கேட்கிறபடி இனம் சமூக சீர்திருத்த மாநாட்டில் பேசிய பல்வேறு பிரச்னைகளையும் பேச இந்த நாட்டில் நம்மைத் தவிர மற்றவருக்கு அக்கறை இல்லையே! இந்தச் சமுதாயச் சீர்கேடுகளைப் போக்க வேண்டுமென்பதில் நாம்தானே அக்கறை காட்டுபவர்களாயிருக்கிறோம்!

அதேபோல் இன்றைய அரசியல் மாநாட்டில், நமது தோழர்கள் நாட்டில் நிலவுகிற பல்வேறு அரசியல் பிரச்னைகள் குறித்தும் பேசினார்கள்; சந்தேகங்களைப் போக்கினார்கள்.

சிலர், காமராசருக்கும் நமக்கும் ஏதோ மறைமுகமான ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகக் கூடப் பேசுகிறார்கள்.

கம்யூனிஸ்டு நண்பர்கள், ஒரு நாள் பக்கம் வைத்து நாம் அழைத்து, வைத்தியநாதனைக் காட்டி மிரட்டி, அவரை ஆதரிக்கலாமா? ... திருத் தம் போன்ற பதவிகளைப் பெற்றிருப்பார், 'தி. மு. கழகம் ஆதரிக்கும்,' என்று நான் அவரிடம் கூறி தப்பித்துக் கொண்டு வந்துவிட்டதாக ஒரு செய்தியைத் தப்பித்துக் கொண்டு, நாட்டிலே பேசி வருகிறார்கள்!

கம்யூனிஸ்டு நண்பர்கள் மிகக் கவலைப்பட்டவர்கள்; பிறருக்கு என்ன கிடைக்குமோ என்று அறியாமல் சொல்லுவார்கள்; மக்களிடம் இப்படிச் சொல்லியாவது மக்களைத் தம்பக்கம் கூட்டிப் பார்க்கிறார்கள்.

காமராசருக்கும் எனக்கும் இப்படி ஒரு தொடர்பை கற்பித்திருக்கிறார்கள், இன்னும் கவலைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நான் கடந்த ஆண்டு போல செல்லாமலிருந்து நடத்திச் செல்லும் தி. மு. கழகம், ஒரு கூட்டு மக்களது அல்ல! ஒரு கொள்கைக் கட்டுப்பாட்டில் ஒருமை வரும் கூட்டமல்ல தி. மு. கழகம்! அப்படி ஒரு காலத்தில் இருந்தோம், ஒரு இடத்தில்! இப்போது அப்படி அல்ல! நான்

இந்தப் பக்கம் போவோம் என்று கூறினால், தம்பிமார்கள், 'ஏன் போக வேண்டும்; எதற்காகப் போக வேண்டும்,' என்று கேட்காமல் புறப்பட மாட்டார்கள்!

அப்படிப்பட்ட ஒரு நல்ல ஜனநாயக உணர்வு பெற்றது தி. மு. கழகம் என்பதை கம்யூனிஸ்டு நண்பர்கள் அறிந்து கொள்ளாததால் வந்த வினை தான், காமராசருக்கும் நமக்கும் தொடர்பு என்ற கதையைக் கற்பிப்பது!

கழகத் தோழர்களிலே கூட யாரேனும் இந்த ஜனநாயக உணர்வை அறிந்து கொள்ளாது, நான் சொல்கிறேன் என்பதாலேயே, அப்படியே கேட்டுக்கொள்ள வேண்டுமென நினைப்பார்களானால், அது, அவர்கள் எல்லாம் இதுவரை கழகம் தந்த பாடங்களைப் புரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் காட்டும்!

காமராசர் என்னிடம் வைத்தியநாதனைக் காட்டி மிரட்டியவர், "என்னை ஆதரிக்கிறீர்களா அல்லது சேலுர் சிறைக்குப் போகிறீர்களா?" என்று கேட்டதாகக் கம்யூனிஸ்டு நண்பர்கள் கூறியிருக்கிறார்கள்!

இது எப்படிப் பொருந்தும் பாருங்கள். வைத்தியநாதனைக் காட்டி மிரட்டியவர், "ஆதரிக்கிறாயா அல்லது சுட்டுக்கொன்று விடட்டுமா?" என்று கேட்டதாகக் கூறினாலும் சற்றுப் பொருத்தமாக இருக்கக்கூடும்.

'எனக்கும் வால் தருகிறாயா; இல்லையானால், பக்கத்துக் குளத்திலே இருக்கும் தவளையை அழைத்து வந்து உன்னைக் கடிக்கச் செய்யட்டுமா,'—என்று பாம்பு கேட்கும்!

காமராசரிடம் மயங்கியோ, அவரால் மிரட்டப்பட்டோ நாம் அவர் பின் செல்வதாக யாராவது எண்ணுவார்களானால் அது தவறு.

நாம் காமராசரை அவர் கல்வித் திட்டம் ஒழிவதற்குக் காரணமாக இருந்தார் என்பதற்காகப் பாராட்டுகிறோம்; அவ்வளவு தான்; அதற்காகவே அவருடைய சுயமரியாதை சர்க்காரை நாம் ஆதரிப்போம் இல்லை என்று கேட்கிறார்கள்.

'பக்கத்து வீட்டுப் பெண்ணின் மீது உனக்குப் பகையா, காதலா' என்று கேட்பது?

இரண்டுக்கும் பகையும் இல்லை; காதலும் இல்லை; அவ்வளவுதான்."

அமெரிக்காவின் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் போருகிறது.

இந்தத் திருத்தங்களில் எதையும், குழுவின் பங்கு கொள்ளும் மற்ற நாடுகள் ஏற்க முடியாத நிலைமையில் இருந்ததால், பிரான்ஸின் மாநாடு கருவிலேயே சிதைந்தது.

கழகக் கூட்டம்

☆

மேச்சேரி

27—8—54 மாலை 4½ மணிக்கு

பத்திரகாளியம்மன் கோயில் திடலில்

தலைவர்: மு. ப. சிவம்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

க. கு. சின்னுசாமி

மலர்ந்துள்ள மலர்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோழர் தங்கப்பழம் அவர்கள் மேலும் கூறிய தாவது:—

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக அரசியல் மாநாட்டுக்கு தலைமை தாங்குகிற பொறுப்பை எனக்களித்த வரவேற்புக் குழுவினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி. மு. கழகம் கடந்த காலத்தில் கடந்துள்ள கரடுமுரடான பாதைகளை; கடந்து வந்துள்ள எதிர்ப்புகள் எத்தனை எத்தனை! தாக்கியுள்ள அடக்குமுறைக் கொடுமைகள் அளவற்றவை!

கடந்த ஓராண்டிலே கழகம் பெற்றுள்ள ஜீவ சக்தியை வளர்ச்சியை யாரும் அழித்துவிட முடியாது. இரத்தத் தடாகத்தைக் காட்டி, துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி இறந்தவர் பிணங்களைக் காட்டி, சிறைக் கம்பிகளைக் காட்டி, நம்மை அழித்துவிட நினைத்தவர்கள் எல்லாம், சலித்துப் போய்விட்டார்கள். நாம் வளர்ந்து கொண்டேதான் வந்திருக்கிறோம்—அத்தனை அடக்குமுறைகளையும் கண்டு அஞ்சிவிடாது!

அப்படி வளர்ந்துள்ள மக்கள் சக்தியாக விளங்கும் நம் கழகத்தின் மீது, இன்னாதவைகளையும், பொல்லாதவைகளையும், இழிச்சொல்லும் பழிச் சொல்லையும் வீசுகிறார்கள்—மலர்ந்து மணம் வீசும் மல்லிகைத் தோட்டத்தின் மீது மலத்தை அள்ளி வீசுவது போன்றது!

நமது பொதுச் செயலாளர் அன்று அவர்கள் கூறியது போல, மல்லிகைத் தோட்டத்தில் வீசப்படும் மலம், அந்த மலர்த் தோட்ட வளர்ச்சிக்கு உரமாகப் பயன்படக் கூடும். அதுபோன்றே நம்மீது வீசப்படுகிற ஏச்சும் பேச்சும், எதிர்ப்பும் நம் வளர்ச்சிக்கு உரமாக அமைய வேண்டும் என்ற எண்ணத்துடன், அவற்றை எல்லாம் மனதில் கொள்ளாது நமது லட்சியப் பாதையில் வேகமாக நாம் நடந்தாக வேண்டும்.

கடந்த காலத்தில் நாம் நடத்திய மகத்தான போராட்டங்கள் இதுவரையில் நம்மால் ஏதும் முடியாது என்று சொல்லியவர்களுக்கு ஏமாற்றத்தையும், 'இவர்கள்! வாய்ச் சொல் வீரர்கள்,' என்று கேலி பேசியவர்களுக்கு சாட்டை அடியையும் தந்திருக்கின்றன.

மக்கள் சக்தி திரண்டெழுந்து நடத்திய அந்தப் போராட்டங்களில் நாம் பெற்றுள்ள பெரும் வெற்றியை பிறரைத் திகைக்கச் செய்திருக்கின்றன.

நம் எதிர்களிலே சிலர், நாம் பெற்றுள்ள வெற்றியை ஒப்புக்கொள்ள வெட்கப்படுகிறார்கள்; ஆனால், நாம் வெற்றி பெற்றோம் என்ற உண்மையைச் சொல்வதை நம்மை நாமே பெருமைப்படுத்திக் கொள்ள அல்ல; மாறாக, பெற்றுள்ள வெற்றி, இனி நாம் பெறவேண்டிய வெற்றிகளுக்கு நமக்கு வளர்ச்சியையும் ஊக்கத்தையும் தரவேண்டுமென்பதற்காகத்தான்?

சிறு சிறு சம்பவங்களை அதிர்ச்சியாகப் பெரிதாக்குகிறார்கள், எனவேதான், காமராசர் அன்று சந்தித்தது குறித்து அவர்கள் கற்பிக்கும் காரணங்கள் எத்தனை எத்தனை?

—(தலைமை உரை முடியவில்லை; நாளை வெளிவரும்)

தலைவர் பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும், 'நாடகக்கலை நடிப்பின் மூலம் கருத்துக்களை சிக்கல் சிக்கலாகச் சொல்லி, மக்களைச் சிந்திக்க வைக்க முடியும்,' என்பதுதானே பொருள்?

தெனாலிராமன் பற்றிக் கதைகள் நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவனது கதை, நகைச்சுவை, வெறும் கேலியாகச் சிரிப்பதற்கு மட்டும் ஏற்பட்டதல்ல; உண்மையிலேயே, சிந்திக்க வைக்கக் கூடியதும் கூட!

இன்று, நாட்டில், சீர்திருத்தம் என்னும் வார்த்தை பல ராலும் பேசப்படுகிறது. எங்கெங்கே திரும்பினாலும் சீர்திருத்தம் பேசப்படுகிறது.

சீர்திருத்தம் என்பது, வெறும் பெயர் மாற்றத்தால் ஏற்படுவதல்ல; மக்களுடைய அன்றாட வாழ்க்கையில், நடத்தையில், அவர்களிடம் நிலவுகிற மூடப் பழக்கங்களும், மடமை எண்ணத்தை அடிப்படையாகக் கொண்ட செய்கைகளும் அறவே நீக்கப்பட்டு, புதிய அறிவுக்குப் பொருத்தமான செய்கைகளும் இடம் பெறுவதுதான் சீர்திருத்தமாகும்.

மக்கள் பிறர் சொல்வதையும் கேட்கவேண்டும்; தாங்களாகவும் சிந்திக்கவேண்டும். கேட்டு, சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து, வருகிற முடிவை செயலில் நடைமுறையில் வைத்துக்கொள்ளவேண்டும். இதுதான் சீர்திருத்தமாகும்.

யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி, தன் இஷ்டப்படி காரியமாற்றுகிற மனப்போக்கு, மாற்றப்பட்டு, யார் சொல்வதையும் கேட்டு, சிந்தித்து சீர்தூக்கி, பின் செயல்புரிகிற நிலைக்கு மக்களைக் கொண்டு வருவதே, இந்த மகத்தான மாற்றத்தை உண்டு பண்ணுவதே சீர்திருத்தமாகும்!

இதில் இன்னும் ஒன்று உண்டு. சிலருக்கு சீர்திருத்த எண்ணமும் இருக்கும்; பழமையைப் பிடியிலும் இருப்பார்கள்; இது கூடாது. இந்த இரண்டும் கெட்டான் நிலை மிகமிக மோசமானது. ஒன்று பழமைக் கருத்துக்களை, சடங்குகளை, சம்பிரதாயங்களை அறவே விட்டுவிட்டு, பகுத்தறிவுக் கருத்துக்களை, சீர்திருத்த செயல்களை மேற்கொள்ளுங்கள்; அல்லது பழமையிலேயே உழலுங்கள்! இதை விடுத்து; 'இரண்டிலும் கொஞ்சம் கொஞ்சம் வைத்துக் கொள்கிறேன்,' என்று நினைப்பது நல்லதல்ல! ஆபத்தானதும் கூட!"

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிட்டு சென்னை (ராயபுரம்) ...வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. ...